செய்தி வெளியீடு எண்: 164 நாள் : 17.04.2015

# செய்தி

## தனியார்துறை பாதுகாப்பு சேவைப் பணிகளில் வேலைவாய்ப்பினை பெறும் வகையில் இலவச திறன் எய்தும் பயிற்சித் திட்டம்

நாட்டின் பொருளாதார வளர்ச்சி காரணமாக பெரு மற்றும் குறு நகரங்களின் வளர்ச்சியானது பெரிதும் வியக்கத்தக்க அளவில் விரிவடைந்து கொண்டே வருகிறது. இதன் விளைவாக உயர்ந்து வரும் அடுக்குமாடி கட்டிடங்கள், பிரம்மாண்ட வணிக வளாகங்கள், தனிக் குடியிருப்புகள், தொழில் நிறுவனங்கள் , வியாபார நிறுவனங்கள் என பல்வகையில் நகரங்கள் விரிவடைந்து கொண்டே வருகிறது. ஆனால், இவ்வளர்ச்சிக்கு ஏற்ப பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளும் போது பயிற்சி பெற்றவர்கள் மிக குறைவான அளவில் உள்ளனர். எனவே, இதனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வாயிலாக இளைஞர்கள், தனியார்த் துறையில் வேலைவாய்ப்பினை பெறும் வகையில் பாதுகாப்பு சேவைப் பணிகள் குறித்து 21 நாள் திறன் எய்தும் பயிற்சியினை தமிழ்நாடு காவல் துறையுடன் இணைந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வாயிலாக வழங்க உள்ளது. இத்திறன் எய்தும் பயிற்சி முழுக்க முழுக்க இலவசமாகும். **பயிற்சி நேரம் தினசரி காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.** பயிற்சியின் முடிவில் திருப்திகரமாக பயிற்சியினை நிறைவு செய்யும் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியின் போது பயிற்சியாளர்களுக்கு தினமும் **தேனீர்** மற்றும் **மதிய உணவு இலவசமாக** வழங்கப்படும். இப்பயிற்சியில் சேர **குறைந்தபட்சம் 8ம் வகுப்பு** தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். உடல் ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும். **வயது வரம்பு 18 முதல் 45க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.**

பயிற்சி சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம், கடலூர், விழுப்புரம், பெரம்பலூர், அரியலூர், நாகப்பட்டினம், கரூர் மற்றும் திருவாரூர் மாவட்ட தலைநகரங்களில் உள்ள காவல்துறை பயிற்சி மைதான அலுவலகங்களில் வழங்கப்படும். இப்பயிற்சியில் மாவட்டத்திற்கு 250 நபர்கள் வீதம். தேர்வு செய்யப்படவுள்ளனர்.தொடர்ந்து பிற மாவட்டங்களிலும் இப்பயிற்சி நடத்தப்பட உள்ளது.

இப்பயிற்சியில் சேர விருப்பம் உள்ளவர்கள் தங்களது **அசல் கல்விச் சான்று, சாதிச் சான்று, இருப்பிட முகவரிக்கான சான்றாக குடும்ப அடையாள அட்டையின் அசல் மற்றும் சமீபத்தில் எடுக்கப்பட்ட 2 புகைப்படங்கள் (passport size) கொண்டு வர வேண்டும். மேலும், இப்பயிற்சியில் சேர இச்சான்றுகளின் 2 நகல்களுடன், பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படும் விண்ணப்பத்தினையும் பூர்த்தி செய்து அளிக்க வேண்டும்.**

**இப்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் 20.04.2015 மற்றும் 21.04.2015 ஆகிய நாட்களில் வழங்கப்படும்.** தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு பிரிவு ஒன்றிற்கு 50 நபர்கள் வீதம் பயிற்சி அளிக்கப்படும். அப்பயிற்சியின் முடிவில் தனியார் துறை பாதுகாப்பு சேவை நிறுவனங்களில் பணியில் சேருவதற்கு ஏதுவாக வேலைவாய்ப்பு முகாம்கள் நடைபெறும்.

பயிற்சியில் சேர விருப்பம் உள்ளவர்கள் மேற்கூறிய தினங்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தை **அணுகுமாறு இயக்குநர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் அவர்கள்கேட்டுக் கொள□கிறார்.**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**